**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10012025-9271

Volume: 10

Issue: 1

Month: July

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.06.2025

Accepted: 29.06.2025

Published: 01.07.2025

Citation:
Prakash, S, and R Elangovan. 2025. "Film Music Songs in Tamils Life: Featuring Vairamuthu's Lyrics." *Shanlax International Journal of Tamil Research, 10*(1), 60–71.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i1.9271

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Ecology of the Sea People

**S. Prakash**
*Ph.D. Research scholar, Department of Tamil*
*Dr.SNS Raja Lakshmi College of Arts and Science (Autonomous)*
*Coimbatore*
*https://orcid.org/0009-0007-9322-727X*

**R. Elangovan**
*Ph.D. Research Guide & Assistant Professor, Department of Tamil*
*Dr.SNS Raja Lakshmi College of Arts and Science (Autonomous)*
*Coimbatore*

**Abstract**
*The sea and the surrounding area are also a part of the sea landscape. In this saline area, dense trees, flocks of birds, marine life, fishermen, and beaches with lapping waves all play a major role in the ecological balance. They go out into the sea in boats and do fishing. They also do business of processing, salting, drying and selling fish. The coastline is full of densely wooded oases. We will discuss this in detail in this research article titled "Ecology of the sea people".*

***Keywords:*** *The Professional of Sea Land People, The Sea and its Creatures, Coastal Oases, Trees on the Beach, Food Chain, Sea Birds, Sea Fish, Shark Hunting*

**References**

1. U.ve.saminathaiyar, 'Kurunthogai moolamum urayum', u.ve.saminathaiyar Nool Nilayam, Chennai, 2017.
2. Ilampoorananar urai, Tholkappiyam (Porulathikaram), Saratha Pathippagam, Chennai, 2005.
3. Pamayan, 'Thinaiyiyal Kotpaadukal', Thadagam, Chennai,2012.
4. Palani velu.K, Tholkappiyath Thinaikkotpadu, Thiranaiviyal Nokku, Maatru veli-yeettagam, Chennai, 2018.
5. Narayanan.S, Valvu tharum Marangal, Thamarai Publications(P) Ltd, Chennai, 2014.
6. 'Thiruvasagam', Saiva Nool Arakkattalai, Chennai, 2022.

# குறுந்தொகையில் நெய்தல் திணைச் சூழலியல்

***சு. பிரகாஷ்***
முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதி நேரம்), தமிழ்த்துறை
டாக்டர். எஸ்.என்.எஸ். இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயமுத்தூர்

***முனைவர் இரெ. இளங்கோவன்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர். எஸ்.என்.எஸ். இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயமுத்தூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*கடலும், கடல் சார்ந்த பகுதி நெய்தல் நிலப்பகுதியாகும். உவர்ப்புத் தன்மையுடைய இப்பகுதில் அடர்ந்த மரங்கள், பறவைக் கூட்டங்கள், கடல் வாழ் உயிரினங்கள், மீனவர்கள், அலைகள் ஆரவாரம் செய்யும் கடற்கரை என அனைத்தும் சூழலியல் சமநிலையில் பெரும்பங்காற்றுகின்றன. இங்கு வாழும் மக்கள் கூட்டமாக இணைந்து வாழும் பகுதியைப் பாக்கம் என்றும் பட்டினம் என்றும் அழைப்பர். இவர்கள் உவர்நீர்க் கேணியைப் பயன்படுத்துவர். கடலுக்குள் படகில் சென்று மீன் பிடித்தலையும், கடற்கரையோரம் உப்பு நீரைத் தேக்கி உப்பு தயார் செய்து உப்பு விற்றல் தொழிலையும், மீன்களைப் பதப்படுத்தி உப்பு சேர்த்து உலர்த்திக் கருவாடு விற்கும் தொழிலையும் செய்கின்றனர். கடற்கரையோரமானது மரங்கள் அடர்ந்த சோலையாகக் காணப்படும். இதைப் பற்றி "குறுந்தொகையில் நெய்தல் திணைச் சூழலியல்" என்னும் தலைப்பிலான இவ்வாய்வுக் கட்டுரையில் நாம் விரிவாகக் காண்போம்.*

***திறவுச்சொற்கள்:*** *நெய்தல் நில மக்களின் தொழில், கடலும் உயிரினங்களும், கடற்கரைச் சோலைகள், கடற்கரையில் மரங்கள், உணவுச் சங்கிலி, கடற் பறவைகள், கடல் மீன்கள், சுறா வேட்டை, குறுந்தொகை, சங்க இலக்கியம், சூழலியல்*

## முன்னுரை

கடலும், கடல் சார்ந்த பகுதி நெய்தல் நிலப்பகுதியாகும். உவர்ப்புத் தன்மையுடைய இப்பகுதில் அடர்ந்த மரங்கள், பறவைக் கூட்டங்கள், கடல் வாழ் உயிரினங்கள், மீனவர்கள், அலைகள் ஆரவாரம் செய்யும் கடற்கரை என அனைத்தும் சூழலியல் சமநிலையில் பெரும்பங்காற்றுகின்றன. இங்கு வாழும் மக்கள்" உவர்நீர்க் கேணியைப் பயன்படுத்துவர். கடலுக்குள் படகில் சென்று மீன் பிடித்தலையும், கடற்கரையோரம் உப்பு நீரைத் தேக்கி உப்பு தயார் செய்து உப்பு விற்றல் தொழிலையும், மீன்களைப் பதப்படுத்தி உப்பு சேர்த்து உலர்த்திக் கருவாடு விற்கும் தொழிலையும் செய்கின்றனர். கடற்கரையோரமானது தாழம்பூவும், ஞாழல் மரமும், புன்னை மரமும் அடர்ந்த சோலையாகக் காணப்படும். இதைப் பற்றி இக்கட்டுரையில் இனி நாம் காண்போம்.

## திணையியலும் சூழலியலும்

மனிதன் தன்னையும், தன்னைச் சுற்றியுள்ள உயிரினங்களின் வாழ்வுரிமைகளை அறிந்துகொண்டு, சுற்றுப்புற இயற்கையை மாசடையாமல் காப்பது பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவது 'Environmental Science' என்னும்

"சுற்றுச்சூழல் அறிவியல்" துறையாகும். இதன் ஒரு பிரிவுதான் "சூழலியல்" (Ecology) என்னும் திணையியலாகும்.

'Ecology' ஐ தமிழில் "சூழலியல்", "திணையியல்" என்று குறிப்பிடும் பாமயன் அவர்கள்,

"Oikos' என்பதற்கு கிரேக்கத்தில் "வாழிடம்" அல்லது வீடு என்று பொருள். 'logy' என்பதற்கு இயல் என்று பொருள். அவ்விரண்டு சொற்களும் கூடி 'Ecology' என்ற சொல் உருவாகியுள்ளது. ஆனால் இன்றைய அறிவியல் இதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் ஓர் உயிரினத்திற்கும், அதைச் சுற்றியுள்ள உயிரினத்திற்கும் உள்ள உறவைப் பற்றிய படிப்பு திணையியல் (Ecology) என்று கூறுகிறது." என்று குறிப்பிடுகிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சூழலியல் பற்றிய சிந்தனைகைள் திணையியல் வடிவில் அமைந்திருப்பதைத் தொல்காப்பியம் வழி அறியலாம். இதில் நிலத்தின் தன்மைகளையும், பருவமாற்றங்களையும் குறிப்பிடப்படும் முதற்பொருளும், தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, தொழில், பண் முதலானவற்றைக் குறிப்பிடப்படும் கருப்பொருளும், சூழல் மாற்றங்களால் நிகழும் மன உணர்வுகளை உரிப்பொருளும் தற்காலச் சூழலியலோடு ஒத்திசைவதை அறியலாம்.

"மனிதர்கள் இன்று பெற்றுள்ள வளர்ச்சிகள் அனைத்தும் இயற்கையிலிருந்து விலகியதனால் பெற்றவையாகும். இயற்கையுடன் மனிதன் இணைந்து உணவு சேகரிப்பு நிலையில் வாழ்ந்த மனிதன் அவ்வியற்கையிலிருந்து விலகத் தொடங்கியது முதலே வளர்ச்சியடைந்து வருகிறான். இந்த வளர்ச்சி இயற்கையைச் சுரண்டிய வளர்ச்சி என்பதை உணர வேண்டும்."[2]

என்று பழனிவேலு. கே அவர்கள் கூறுகிறார். குறுந்தொகையின் நெய்தல் திணைப் பாடலில் இடம்பெறும் சூழலியல் சிந்தனைகளை பற்றி இனி இவ்வாய்வில் காணலாம்.

## நெய்தல் நில மக்களின் தொழில்

கடலும் கடற்சார்ந்த பகுதி உவர் நீராகக் காணப்படுவதால் இங்கு வாழும் மக்களால் மருத நில மக்கள் போல் வேளாண்மை செய்து நெல்லை விளைவிக்க முடியாது. அதனால் இவர்கள் மீன் வலை பின்னி, மிதக்கும் தன்மையுள்ள மரக்கலத்தினால் படகு செய்து, கடலுக்குள் துடுப்பினால் தள்ளி, உள்ளே சென்று வலை வீசிக் காத் திருந்து பல்வேறு மீன்களைப் பிடித்து வந்து கடற்கரையோரங்களிலும், மற்ற மருத நிலப்பகுதியில் வாழும் மக்களிடம் சென்று மீன்களை விற்று, பண்டமாற்று முறையில் நெல்லைப் பெற்று வந்து உண்பர். மேலும், விற்காத மீனை உப்பைத் தடவி கடற்கரை மணலில் சூரிய வெப்பத்தில் உலர வைத்துக் கருவாடும் விற்பர். இவர்களைப் பரதவர் என்று அழைப்பர். இவர்கள் கடலோரங்களில் குடிசை அமைத்து வாழும் சேரிகளை உடையவர்களாவர். மீன் பிடிப்பதும், உப்பு விற்றலுமே இவர்களது தொழிலாக உள்ளது.

சுறா தாக்கியதில் உண்டான புண் ஆறியவுடன் மீண்டும் மீன் பிடிக்க கடலுக்குள் செல்லுதலையும், கடற்கரையில் வாழும் மகளிர் மருதநிலத்தில் விளையும் வெண்ணெல்லை பண்டமாற்று முறையில் பெறுவதற்காக உப்பளம் நோக்கிச் செல்லுதலையும் பற்றி 269 ஆம் பாடலில் காணலாம்.

பெருங்கடலில் பரதவர்கள் பிடித்து உலாத்திய மீன் வற்றலும், கழிமுகங்களில் பிடித்த இறால் வற்றலும் நறுமணத்தைப் பரவி நிற்கும் வெண்மணற் பரப்பினைப் பற்றி 320 ஆம் பாடலிலும் காணலாம்.

## கடலும் உயிரினங்களும்

பலகோடி ஆண்டுகளுக்கு முன் நெருப்புக் குழம்பாக இருந்த இப்பூமிப் பந்து வளிமண்டல இயற்கைக் குளிர்வினால், புவி மையத்தைத் தவிர அதனைச் சுற்றியுள்ள பகுதி அடர்த்தியான பாறைகளாகவும்,

பாறைகளில் மேல் அடுக்குச் சாம்பல் கனிமங்கள் மண்ணாகவும் மாற்றமடைந்தது.

பின் புவி உட்புற நெருப்புக்குழம்பின் அழுத்தத்தின் காரணமாக எரிமலைக் குழம்புகள் மேலெழுந்து வர, அவை குளிர்ந்து மலைத்தொடர்களாக மாற்றமடைந்து, கால வெள்ளத்தில் புவியைச் சுற்றியிருந்த பல வாயுக்களில் ஹைட்ரஜன் 2 பங்கும், ஆக்ஸிஜன் 1 பங்குமென வேதி மாற்றம் நிகழ்ந்து மேகங்கள் குளிந்து நீர் (2) உற்பத்தியாகி, மழையாக மண்ணில் விழுகிறது.

மண்ணிற்குள் தேங்கிய மழை நீர் மிகுந்த அழுத்தம் பெற்று, மலைத் தொடர்களில் உள்ள துளைகள் வழியாக நீரூற்றுக்கள் அருவி நீராக, ஆற்று வெள்ளமாக, மண்ணில் உள்ள உப்புத் தாதுக்களையெல்லாம் அடித்துக் கொண்டு புவிமேட்டிலிருந்து பள்ளம் நோக்கிக் கொண்டு வரப்பட்ட பல்வேறு உப்புத் தாதுக்கள் கலந்த நீர்த் தன்மைதான் இப்போது கடலாக ஆர்ப்பரித்துக் கொண்டுள்ளது.

புவியின் மேலடுக்கில் உள்ள பரப்பளவில் 3-ல் 2 பங்கு நீராகத்தான் சூழப்பட்டுள்ளது. பல ஆண்டுகள் கழித்து,வேதி வினை காரணமாக, பாசிகள், புஞ்சைகள் என பல தொடர் மாற்றங்களுக்குப் பிறகு, ஒரு செல் உயிரியாக நுண்ணுயிர்கள் தோன்றி, இந்நுண்ணயிர்கள் பிற்காலத்தில் நீர் வாழ் தாவரங்களாகவும், மீன்களாகவும், பரிணாம வளர்ச்சி பெற்று நில வாழ் உயிரினமாகவும் மாற்றமடைந்து இதைத் தான் மாணிக்க வாசகரும்,

> **“வானாகி மண்ணாகி வளியாகி ஒளி யாகி
> ஊனாகி உயிராகி உண்மையுமாய்
> இன்மையுமாய்க்”**[3]
>
> **(திருவாச.திருச்சதக.15)**

என்று கூறியுள்ளார்.

உயினங்களின் முறையான தோற்றத்தின் படிநிலை வளர்ச்சியை வெளி நாட்டு அறிவியல் அறிஞர்கள் தோன்றுவதற்கும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியமும்

> **“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
> இரண்டறி வதுவே அதனொடு நாவே
> மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
> நூன்கறி வதுவே அவற்றொடு கண்ணே
> ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
> ஆறறி வதுவே அவற்றொடு மனனே
> நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே’’**[4]
>
> **(தொல்.பொருள். மரபு.571)**

என்று நம் முன்னோர்கள் கூறியிருப்பதாக சுட்டிக்காட்டியமை இங்கு நோக்கத்தக்கது.

### கடற்கரைச் சோலைகள்

கடலும், கடலோர மணலும் உப்புத் தன்மையோடு இருப்பது மனிதன் மட்டுமல்லாமல் தாவரங்கள், விலங்குகள், பறவைகள் முதலானவற்றிற்கு உகந்ததொரு வாழிடமாக அமையாது. அவை எல்லாவற்றிற்கும் உகந்ததாக மாற்றுவதே நிலப்பரப்பில் பாய்ந்தோடி வரும் ஆறுகள் தான்.

இந்த ஆறும் கடலும் கலக்கும் பகுதியைக் கழிமுகம் என்றழைக்கப்படுகிறது. இந்த நன்னீரும், உப்புக் காற்றும் கழிமுக ஓரங்களிலிருந்து கடலோர நிலப்பரப்புகளிலெல்லாம் புன்னை, ஞாழல், தாழை, பனை, தென்னை முதலிய தாவரங்கள் தோன்றி அடர்ந்த காடுகள் நிறைந்த கடலோரச் சோலைகளாகக் காட்சியளிக்கிறது.

இத்தகையை எழில் கொஞ்சும் கடலோரச் சோலைகள் பற்றிக் குறுந்தொகையில், கடலில் நீர் விளையாடுதலைச் செய்த மகளில் கடற்கரைச் சோலையில் மணற் திட்டில் சிறு மனை கட்டி விளையாடுவதை பற்றி 326, 245, 324, ஆம் பாடல்களிலும், வெண்மையான நாரைகள் உலாவும் மலர்ச் சோலையைப் பற்றி 381 ஆம் பாடலிலும் காணலாம்.

### மரங்கள்

#### அ) பனை மரமும் மண்ணரிப்பும்

கடற்கரையில் மண்ணரிப்பு ஏற்படக் கூடாதென்றால் மரங்கள் நிறைந்த வனப் பகுதியை அழித்தல் கூடாது. மரங்களின் வேர்கள் மண்ணிற்குள் நன்கு வேறூன்றி,

மண்ணை இறுகிப் பற்றிக் கொள்வதால் மண்ணரிப் ஓரளவு தடுக்க முடியும். இத்தகைய பணியைத்தான் மரங்கள் மறைமுகமாக வனப்பகுதியைக் காக்கிறது.

பனைமரம் மூழ்குமாறு கடுமையான காற்று சுழற்றியடித்துக் குவித்த மண் மேட்டினைப் பற்றிக் குறுந்தொகையின் 372ஆம் பாடலிலும், கடற்கரைச் சோலையிலுள்ள பனை மரத்தின்கண் தங்கியுள்ள அன்றில் பறவைக்குத் தங்கும் இடமாக விளங்குவதைப் பற்றிக் குறுந்தொகையின் 177 ஆம் பாடலிலும் காணலாம்.

## ஆ) புன்னை மரமும் பேரலைத் தடுப்பும்

புன்னை மரமானது நன்னீரப் பகுதியைவிட உவர்நீர்ப் பகுதியில் மிகுதியாகக் காணப்படும், புன்னை மரமானது மலைப்பகுதியில் வளரும்காட்டுப்புன்னை, ஆற்றோரங்களில் வளரும் சிறு புன்னை, கடலோரங்களில் அலையாத்தி என்றழைக்கப்படும் சுரபுன்னை என பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது.

அலையாத்தி என்றால் அலையை ஆற்றுபடுத்துதல், அலையைத் தடுத்து நிறுத்துதல் என்று பொருள். இதனால்தான் இம்மரத்திற்கு இப்பெயரிட்டு மக்கள் அழைத்து வந்துள்ளனர். இந்த கடற்கரையோர அலையாத்திக் காடுகள் மாங்குரோவ் காடுகள், சதுப்பு நிலக்காடுகள் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதியான முத்துப்பேட்டை, பிச்சாவரம் முதலிய இடங்களில் தற்போது அலையாத்திக் காடுகள் அடர்ந்து காணப்படுகின்றன. முன்பு ஒரு காலத்தி கடற்கரையோரங்களில் அலையாத்திக் காடுகள் மிகுந்து காணப்பட்டன. காலப்போக்கில் இறால் பண்ணை வியாபாரிகளால் இக்காடுகள் படிப்படியாக அழிக்கப்பட்டதன் விளைவாக 26.12.2004 அன்று ஏற்பட்ட "சுனாமி என்ற ஆழிப் பேரலை இந்தோனேசுயா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து கடற்கரைப் பகுதிகளில் லட்சக்கணக்கான மக்களை விழுங்கிவிட்டது. அலையாத்திக் காடுகள் இருந்திருந்தால் இந்த அளவுக்கு மனிதர்கள் மடிந்திருக்க மாட்டார்கள். பாதிப்புற்ற இடங்களில் ஒரு காலத்தில் அலையாத்திகள் இருந்தன. அவை அழிந்த இடத்தில் இறால் பண்ணைகள் வந்தன"[5]

மேலும், இவ் அலையாத்தி மரங்களில் இரண்டு வகையான வேர்கள் உள்ளன. ஒன்று பூமிக்குள் சென்று மண்ணை இறுக்கமாகப் பற்றிக் கொண்டு மண்ணரிப்பைத் தடுக்கிறது. மற்றொன்று மண்ணைவிட்டு வெளி யே வந்து காற்றைச் சுவாசிக்கிறது. இவ்வேர்கள் நீரோடு தொடர்பு கொண்டிருப்பதால் மீன்கள், நண்டுகள், பவழப்பாறைப் பூச்சிகள், சில நுண்ணுயிரிகள் முதலானவற்றிற்குப் புகலிடமாகவும், கடற்கரையோரம் இருப்பதால் நாரை, கடற்காக்கை மற்றும் சில அரிய பறவைகளுக்கும் புகலிடமாக விளங்குகிறது.

அலையாத்திக் காடுகளுக்கு கடலின் அலைச்சீற்றத்தையும், புயல் காற்றின் வேகத்தையும் கட்டுப்படுத்தும் தன்மை இருக்கிறது.

"சுனாமி அழிவுக்கு நிரந்தரப் பரிகாரம் அலையாத்தியைப் பயிரிடுவதுதான். அலையாத்திகள் மிகுந்துள்ள முத்துப் பேட்டையிலும், பிச்சவரத்திலும் அழிவு இல்லை. பவழப்பாறைகள் நிறைந்த இராமேஸ்வரத்திலும் அழிவு இல்லை. இவ்வாறே, அலையாத்தி அடர்ந்துள்ள கார் நிக்காபார் தீவுகளில் உள்ள காடுகள், பவழப் பாறைகள் ஆயிரக்கணக்கான மீனவர்களைக் காப்பாற்றியதாகச்' செய்திக் குறிப்பு உள்ளது"[6] என்று எஸ்.நாராயணன் கூறுகிறார்

இத்தகைய தன்மைகளை உடைய புன்னையைப் பற்றி சங்க இலக்கியங்களில்

குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. குறுந்தொகையிலும் நெய்தற் திணைப் பாடல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

கடற்கரையில் பரந்து விரிந்துள்ள நிழல் தரும் புன்னை மரத்தில் குருகுகள் உறங்குவதை குறுந்தொகையின் 5 ஆம் பாடலிலும், நிலவொளி போல் குவிந்து காணப்படும் வெண்மையான மணற் பரப்பினருகில், இருள் போன்ற அடர்ந்த ஈரமும் குளிர்ச்சியான நிழலையும் தரும் புன்னையைப் பற்றிக் குறுந்தொகையின் 123 ஆம் பாடலிலும் காணலாம்.

கடற்கரைச் சோலையில் பூக்கள் மலரும் புன்னை மரத்தில் பறவைகள் அமர்ந்து ஒலி செய்து ஆரவாரிப்பதைக் குறுந்தொகையின் 299 ஆம் பாடலிலும், உயரமாகக் குவிந்த வெண்மையான மணல் மேட்டில் தாழ்ந்து வளர்ந்துள்ள புன்னையின் நறுமணமிக்க தாது நிறைந்த மலர்களைக் கொய்யும் மகளிர் கூட்டத்தைக் குறுந்தொகையின் 311 ஆம் பாடலிலும்,புலால் நாற்றம் வீசுகின்ற கடற்கரைச் சேரியினிடத்து உயர்ந்து வளர்ந்து உள்ள புன்னை மரத்தில் மலர்கள் நிறைந்து காணப்படுவதைக் குறுந்தொகையின் 351 ஆம் பாடலிலும், காணலாம்.

### இ) மராஅ

கடம்ப மரத்தையே சங்க இலக்கியங்கள் மராஅ மரம் என்று குறிப்பிடுகின்றது. நற்.20, ஐங்.348, கலி.26,101, அகம்.211,261,265, குறிஞ்சி.85, முதலான பாடல்களில் மராஅ மரத்தைப் பற்றி குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

கடலோரச் சோலையின் அயலின்கண் உள்ள கடம்ப மரத்தின் கூட்டிலிருக்கும் தனது குஞ்சுகளுக்கு கதிரவன் மறைந்த மாலை நேரத்தில் இரை கொண்டு செல்லும் பறவை பற்றி

**"ஞாயிறு பட்ட அகல் வாய் வானத்து**
**அளியதாமே-கொடுஞ் சிறைப் பறவை,**
**இறை உற ஓங்கிய நெறி அயல் மராஅத்த**
**பிள்ளை உள்வாய்ச் செரீஇய**
**இரை கொண்டமையின், விரையுமால் செலவே"**

**(குறுந்.92:1-5)**

என்ற பாடலடிகளிலும் காணலாம்.

### ஈ) தாழை

கடற்கரைச் சோலையில் உள்ள நீர் நிலைகளின் அருகில் தாழை மரம் மிகுந்து வளர்ந்திருக்கும். நறுமணம் மிக்க இதன் மலரை மகளிர் தன் தலையில் பூவாகச் சூடிக்கொள்வர். நாரைகள் இங்கு தங்கி ஓய்வெடுக்கும். பாம்புகளும் இதன் நறுமணத்திற்கு இங்கு உலாவிக் கொண்டிருக்கும். இத்தகைய நீர் நிறைந்த சோலையில் தாழை இருப்பதைக் குறுந்தொகையின் 303 ஆம் பாடலில் காணலாம்.

### உ) ஞாழல் மரம்

ஞாழல் மரமானது கடற்கரைச் சோலையில் மிகுந்து காணப்படும். இதில் நறுமணமிக்க மலர்கள் பூக்கும். இதன் மலர்களை நெய்தல் நில மகளிர் சூடிக்கொள்வர். இம்மரத்தில் கடற்கரையில் வாழும் பறவைகள் தங்கி ஓய்வெடுக்கும்.

ஞாழல் மரத்தடியின் வேரில் வலை அமைத்து வாழும் நண்டினைப் பற்றிக் குறுந்தொகையின் 328 ஆம் பாடலிலும், குளிர்ச்சியான மலர்களை மலர்ந்து மணம் வீசும் ஞாழல் பற்றி குறுந்தொகையின் 310, 397 ஆம் பாடல்களிலும் காணலாம்.

### ஊ) குராவும், புன்க மரமும்

கடற்கரைச் சோலையில் குராவும், குளிர் நிழலையும் அழகையும் தந்து பறவைகளுக் குக் கூடாரமாக விளங்கும் புன்க மரத்தைப் பற்றியும்,

**"பல்வீ பட்ட பசுநனைக் குரவம்**
**பொரிப்பும் புன்கொடு பொழிலணிக் கொளாஅச்"**

**(குறுந்.341:1-2)**

என்ற பாடலடிகளில் காணலாம்.

### உணவுச் சங்கிலி

இப்புவியில் உள்ள உயிரினங்களில் அவற்றின் பெருக்கத்தைக் கட்டுபடுத்த

இயற்கையே அமைத்த ஒரு சங்கிலிப் பிணைப்பு தான் உணவுச் சங்கிலியாகும். குடலில் சிறு பாசிகளை சிறு மீன்களும், அச்சிறிய மீன்களை அதைவிடப் பெரிய மீன்களும், பெரிய மீன்களைநாரைகள் மற்றும் சுறாக்கள் இரையாக்கிக் கொள்வதும், ஒன்றை மட்டுமே சார்ந்திராமல் பலதரப்பட்ட உணவுகளை உண்ணும் அமைப்பிற்கு உணவு வலை என்று பெயர். நண்டுகளை நாரைகள் உணவாக்கிக் கொள்வதும் இயற்கை உணவுச் சங்கிலியாகும். சிறு சிறு புழுக்களையும், பாசிகளையும் தின்று வாழும் சிறிய மற்றும் பெரிய மீன்கள், நண்டுகள், இறால் மீன்கள், கடல் ஆமைகள், சுறாக்கள் முதலானவற்றை உணவாக உண்ணும் மனிதன் உணவு வலைக்குச் சிறந்த உதாரணமாவான். மேற்கண்ட உணவுச்சங்கிலியும், உணவு வலையும் இயற்கைச் சமநிலையைச் சீர்படுத்துவனவாக உள்ளன.

கடலில் கிடைத்த இரையான ஆரல் மீனைத் தனக்கு உணவாகக் கொத்தித் தின்ற நாரையைப் பற்றிக் குறுந்தொகையின் 114ஆம் பாடலிலும், அடும்பின் கொடி மலரைச் சிதைத்து, வளைந்த காலையுடைய நாரை மீனை உண்ணுதலைப் பற்றிக் குறுந்தொகையின் 349 ஆம் பாடலிலும், தன்னை உண்ண வரும் கொக்கைக் கண்டு அஞ்சிய நண்டை பற்றி குறுந்தொகையின் 117ஆம் பாடலில் காணலாம்.

## காற்று

புவியில் சூரிய வெப்பத்தாக்கம் மிகுதியான அழுத்தம் ஏற்படுத்துவதால் புவி நிலப் பரப்பிலுள்ள நைட்ரஜன், ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், கார்பன்-டை-ஆக்ஸைடு போன்ற வாயுக்களின் அழுத்தம் குறைந்து மேல்நோக்கி விலகல் அடைந்து விடுகின்றது. கடற்பரப்பு குறைவான வெப்பத்தை அழுத்தத்தை மட்டுமே ஈர்க்கும் என்பதால் இங்கு சூரிய வெப்பத்தாக்கம் குறைவான அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் இங்குள்ள வாயுக்களின் அழுத்தம் அதிகமாகி அவை ஒன்றொடொன்று இணைந்து கொள்கிறது. பின் இவை புவியின் சாய்வு கோணம் காரணமாகவும், புவியின் சுழற்சி காரணமாகவும், வாயுக்களின் நகர்வு மற்றும் அழுத்தத்திறகுத் தக்கவாறு மலைகளில் மோதி, மரக்கிளைகளையசைத்து, நமக்கு காற்றாய் மாறுகிறது.

சூரிய வெப்பத்தாக்கமும், வாயுக்களின் அழுத்த நகர்வும், புவியின் சாய்வு கோணம் மற்றும் புவி சுழற்சி காரணமாகவும் புவிப்பரப்பில் கார்காலம், குளிர்காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம், இளவேனிற் காலம், முதுவேனிற் காலம் என பருவமாற்றமும் நிகழ்கிறது.

நம் முன்னோர்கள் வளிமண்டலக் காற்றை நான்கு வகையாகப் பிரித்துள்ளனர். அவை, வடக்கிலிருந்து வீசும் காற்றை வாடைக் காற்று என்றும் ஊதைக்காற்று என்றும் அழைப்பர், தெற்கிலிருந்து வீசும் இதமான காற்றை மென் காற்று என்றும் தென்றல் காற்று என்றும் அழைப்பர், கிழக்கிலிருந்து வீசும் காற்றை கொண்டல் காற்று என்றும் மழைக்காற்று என்றும் அழைப்பர், மேற்கிலிருந்து வீசும் காற்றை குடக்கு என்றும் மேற்காற்று என்றும் வெப்பக்காற்று என்றும் அழைப்பர்,

பொங்குகின்ற அலைத்துளிகள் மேகத்தோடு பொருந்தி வாடையாகிய ஊதைக் காற்று வீசியதை, குறுந்தொகையின் 55, 397 ஆம்பாடல்களிலும், மெய் தடவும் மென்மையினை உடைய தென்றல் காற்றைப் பற்றி 195 ஆம்பாடலிலும் காணலாம்.

கடற்கரைச் சோலையில் உள்ள பனைமரம் புதையும் வண்ணம் மேற்காற்றால் குவிந்த மணல்மேடு பற்றி குறுந்தொகையின் 248 ஆம் பாடலிலும் காணலாம்.

## கடற் பறவைகள்

மணல்மேடிட்ட கடற்கரைச் சோலையானது மரங்கள் அடர்ந்து காணப்படுவதால் பெரும்பாலான கடற்பறவைகளுக்குத் தங்கும்

வீடாகவும், இனப் பெருக்கக்களனாகவும், விளங்குவதோடு மட்டுமல்லாமல், மரங்களுக்கு ஊறு விளைவிக்கும் சிறு சிறு நச்சுப் பூச்சிகளையும் உண்டு மரங்களைக் காக்கின்றது.

சுனாமி வரும்போது முன் கூட்டியே அவை கூட்டமாகப் பறந்து, பதட்டமான ஒலிகளை எழுப்பி நமக்கு அறிவிப்பும் செய்கிறது. கடலிலிருந்து கடற்கரையில் ஒதுங்கும் இறந்துபோன மீன்களையும் உண்டு சுற்றுப்புறச் சூழலைக் காக்கிறது. நண்டுகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் உணவுச் சங்கிலியாகவும் பறவைகள் செயல்படுகின்றன.

காலப்போக்கில் கடற்சோலைகள் அழிக்கப்பட்டு, அவ்விடத்தில் தங்கும் விடுதிகள் அமைத்திருப்பதாலும், சாலையோர வாகனப் புகை மற்றும் ஒலி மாசுபாட்டின் காரணமாகவும், கடற்பறவைகளின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்து வருகிறது. நாரை இனங்களும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்க முடியாத சோலைகளற்ற சூழலில் அவற்றின் இனப்பெருக்க வாழ்வாதாரமும் அழிந்து கொண்டு வருகிறது.

இதற்குக் காரணம் மக்கட்தொகைப் பெருக்கம் மட்டுமே என்று காரணம் கூறி ஒதுங்கிவிடாமல், பறவைகளுமான வாழ்வாதாரத் திட்டங்களை அரசு செயல்படுத்தி, அலையாத்திக் காடுகள் போன்ற மாங்குரோவ் காடுகளை வளர்த்து பறவையினங்கள் அழியாமல் காக்க வேண்டும்.

சூரியன் மறையும் மாலை நேரத்தில் கடம்ப மரத்தில் கூடுகட்டித் தனது குஞ்சுகளுக்கு இரை கொண்டு செல்லும் பறவையைப் பற்றிக் குறுந்தொகையின் 92 ஆம் பாடலிலும், பனை மரத்தின் மடலில் அமர்ந்திருக்கும் "அன்றில்" பறவையைக் குறுந்தொகையின் 177ஆம் பாடலிலும் காணலாம். தங்களுக்கிடையே ஒரு பூ விழுந்தாலும் ஓராண்டு கழிந்தது போன்று துன்படும் காதலை வெளி ப்படுத்தும் நீர்த் துறையில் உறையும் மகன்றிற் பறவையின் புணர்ச்சியைப் பற்றி

**"புவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன**
**நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்"**
**(குறுந்.57:1-2)**

என்ற பாடலடிகளில் காணலாம்.

மேகங்களுக்கிடையே உயரமாகப் பறந்து செல்லும் கடற்சோலையில் வாழும் அன்னப் பறவையைப் பற்றி குறுந்தொகையின் 205, 304 ஆம் பாடல்களில் காணலாம்.

பறவைகள் ஆரவாரம் செய்யும் கடற்கரையைப் பற்றி குறுந்தொகையின் 243, 299, 310 ஆம் பாடல்களில் காணலாம்.

சிறிய வெண்மையான கழுத்தையுடையதும், சிவந்த உள்வாயினையும் உடைய காக்கையானது அலைகளின் நீர்த்துளியில் நடுங்கிக் கொண்டு பல மலர்கள் நிறைந்த சோலையில் தங்கியிருந்ததைப் பற்றி குறுந்தொகையின் 334 ஆம்பாடலில் காணலாம்.

கடற்கரைச் சோலைக்குக் கூட்டமாக வந்து நீரினிடத்தும் சேற்றினிடத்தும், ஆரல் மீன், மீன்களை இரை தேடியலையும்' "நாரைகள்" பற்றி குறுந்தொகையின் 103, 163, 349 ஆம் பாடல்களிலும், ஆரல் மீனை நாரைகள் உண்பதை 114 ஆம் பாடலிலும், மரக்கிளையில் தங்கியிருக்கும் நாரையை 125 ஆம் பாடல்களிலும், அலைகளினால் தானாகப் பெறப்பட்ட அயிரை மீனையுண்ணும் நாரையை 166ஆம் பாடலிலும், புன்னை மரக்கிளையில் தங்கும் நாரையை 236, 296 ஆம் பாடலிலும், கழியில் மீனுண்ணும் பொருட்டு தாழையில் அமரும் நாரையை 303 ஆம் பாடலிலும், கடற்கரையில் ஒலி எழுப்பும் நாரையை 381 ஆம் பாடலிலும், முதுமையால் சிறகுகள் நீக்கப்பட்ட நாரையை 128 ஆம் பாடலிலும் காணலாம்.

வௌவாலானது முதுகெலும்புடைய பாலூட்டி வகையைச் சேர்ந்ததாகும். நில வாழ் பாலூட்டிகளிலேயே பறக்கக் கூடிய விலங்கு, இதன் முகம் நரி போன்ற தோற்றத்திலும், உடல் வளுவளுப்பான தன்மையிலும் காணப்படும். பகல்நேரம் முழுக்க பெரிய மரங்களில் கூட்டமாக, தலைகீழாகத் தொங்கியபடியிருக்கும், இரவினில் பூச்சிகளை வேட்டையாடி உண்ணும். தற்போது வௌவால் என்றழைக்கப்படும் வாவல் ஆகும். கடற்சோலையில் மாலை நேரத்தில் பழுத்த மரங்களைத்தேடிச் செல்லும் மென்மையான சிறகுகளையுடைய வௌவாலை, குறுந்தொகையின் 172 ஆம்பாடலில் காணலாம்.

### கடல் மீன்கள்

நீர் வாழ் உயிரினங்களில் முதன்மையான இடத்தை வகித்து உலகம் முழுவதும் சூழப்பட்ட கடலில் வகை வகையான, பல வண்ணங்களில், அளவில் சிறியதுமாகவும், பெரியதுமாகவும், உண்ணக் கூடியதுமாய், விசத்தன்மை வாய்ந்ததுமாக மீன் இனங்கள் பரவிக் காணப்படுகின்றன. சிறிய மீன்களை ஆமைகள் உண்பதும், பெரிய மீன்களை அளவில் பெரிய கடற்சுறா உண்பதும் கடலின் உணவுச் சங்கிலிச்சூழல் நீள்கிறது.

மேலும், மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு முதன்மை ஆதாரமாக மீன்கள் விளங்குகிறது. நெய்தல் நிலத்தில் வேளாண்மை செய்ய முடியாத காரணத்தால் இங்கு வாழும் மீனவர்கள் மீன் பிடிக்கும் தொழிலை இயற்கையோடு இயைந்து செய்கிறார்கள்.

மக்கள் கடல் மீனை விரும்பி உண்ணுவதால் கடற்கரையருகில் மீன் பண்ணை அமைத்து மீன்களை வளர்த்து வியாபாரிகள் மீன்களைப் பல இடங்களுக்கும், வெளி நாட்டிற்கும் ஏற்றுமதி செய்கின்றனர். இத்தகைய செயலில் பிடி மீன், வளர்ப்பு மீன் என இரண்டு வகையுள்ளது. “பிடி மீன்” என்பது கடலுக்குள் சென்று இயற்கையாக மீன் பிடிப்பதாகும். “வளர்ப்பு மீன்” என்பது நீர் தேக்கிப் பண்ணை அமைத்து வேதிப் பொருட்களைக் கொடுத்து வளர்த்து, உருவத்தில் பெரிதாக்கி, மரபணு மாற்றத்திற்கு உள்ளாக்கி, விற்பனைக்குக் கொடுப்பதாகும்.

இத்தகைய மீன்களால் மக்களுக்கு உடலளவில் நோய்த்தன்மை மிகுவது மட்டுமில்லாமல், பண்ணை அமைக்கும் போது தேக்கப்படும் உப்பு நீரை அடிக் கடி மாற்றி, நிலத்தில் கொட்டுவதால் அந்நிலத்தின் அருகில் உள்ள விவசாய நிலமும் பயனற்றதாக மாறிவிடுகிறது. ஆகையால், இது போன்ற பணக்கார மோக கடல் நீர் பயன்படுத்தும் மீன் பண்ணை, இறால் பண்ணை வைப்பதை அரசு அனுமதியளிப்பதை நிறுத்தி, மீன்களை இயற்கையின் போக்கிலேயே விட்டுவிட்டு, விவசாய நிலத்தையும் காக்க வேண்டும்.

குறுந்தொகையில் மீன்கள் பற்றிய செய்திகளை 9, 103, 163, 269, 296, 303, 349 ஆம் பாடல்களிலும், ஆரல் மீனைப் பற்றி 114 ஆம் பாடலிலும், அயிரை மீனைப் பற்றி 128, 166, 296 ஆம் பாடல்களிலும், வளைந்த முள் போன்ற கால்களையுடைய இறால் மீனைப் பற்றி 109, 320 ஆம் பாடல்களிலும் காணலாம்.

### சுறா வேட்டை

கடலில் வாழும் மிகப்பெரிய மீன்களில் நீலத்திமிங்கிலத்திற்கு அடுத்தபடியாக இருக்கும் கடல் வாழ் உயிரினமாக விளங்குவது சுறாவாகும். இந்த சுறாக்கள் உலகளவில் நானூறுக்கும் மேற்பட்ட வகைகளையுடையதாக இருக்கிறது. சுறாவின் சில இனங்கள் அழிவின் நிலையில் உள்ளன. இவற்றை வேட்டையாடுவதையும் பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன. சுறாவானது முதுகிலிருந்து உடலில் பரவியிருக்கும் குறுத்தெழும்பினையுடையதாகவும், இரைகளைக் கிழித்துத் தின்னும் கூர்மையான பற்களையும், சூரியஒளி குறைந்த ஆழத்தின் சிறு வெளிச்சத்தில்

கூட இரையைப் பார்க்கும் தெளிவான பார்வையைக் கொண்டதாகவும் விளங்குகிறது.

சுறா மீனின் துடுப்பில் சூப் வைத்துக் குடிப்பதற்காகவும், சுறாவின் இறைச்சிக்காகவும், சுறா எண்ணெய்க்காகவும், மருத்துவத் தன்மைக்காகவும், உலகளவில் இயந்திர விசைக்கப்பல் மூலமாக சுறாக்கள் வேட்டையாடப்பட்டு வருகிறது. இதன் உடலமைப்பானது கடலில் வேகமாக நீந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இந்த சுறாக்கள் கூட்டமாகத் திரியும் பெரிய மீன்களையும், இறந்த மீன்களையும், உண்டு சுற்றுச்சூழலைச் சமப்படுத்துகிறது.

"வயச்சுறா", "எறி சுறா", "கோட்டுமீன்" என்று பெயர் வழங்கப்படும் சுறா மீனைப் பற்றிய குறிப்புகள் குறுந்தொகையிலும் காணப்படுகிறது. கடலில் வலிமையாகத் தாக்கும் சுறாமீன் இருப்பதைக் குறுந்தொகையின் **230, 318** ஆம்பாடல்களில் காணலாம்.

ஒரு துளி இரத்தம் கடலில் விழுந்தால் கூட அதை மோப்பம் பிடித்து அவ்விடத்திற்கு சுறாவானது வந்துவிடும். இதனால்தான் காயம்பட்ட மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லமாட்டார்கள். சுறாமீன் வேட்டையாடச் சென்றவருக்குப் புண் ஏற்பட்டுக் குணமடைந்து, மீண்டும் மீன் வேட்டைக்குச் செல்வதைக் குறுந்தொகையின் **269** ஆம்பாடலில் காணலாம்.

வளைந்த படகில் பரதவர்கள் கடலுக்குள் சென்று, உலர்ந்த மூங்கிலை சுறாமீனின் மீது எறிந்து வேட்டையாடியதைக் குறுந்தொகையின் **304** ஆம்பாடலிலும் காணலாம்.

### நண்டுகள்

ஓடுடைக் கணுக்காலி வகையைச் சேர்ந்த வளைந்த கால்களையுடைய நண்டானது கடற்கரை மணலில் வளை அமைத்து வாழும். இந்நண்டினை கடற்கரையில் இரைதேடியலையும், நாரை போன்ற பறவைகளும் இருக்கின்றன. சிலவகைக் கடல் நண்டின் ஓடானது கடற்கரை மணலைப் போன்ற நிறத்திலேயே காணப்படும். இதனால் வேகமாக ஓடாமல் ஒரே இடத்தில் நின்றால் இவற்றை உண்ணும் பறவைகளின் கண்களுக்குத் தெரியாது.

இந்த நண்டுகள் தனது உணவிற்காக கடற்கரை மணலில் வளையமைத்துக் காத்திருக்கும், அப்போது வரும் அலைகளால் ஈரமாக்கப்பட்ட மணலைத் தனது கைகள், மற்றும் வாயால், மணலிலுள்ள புழுக்களையும், நுண்ணுயிரிகளையும் உண்டு, பின் மணலை சிறு சிறு உருண்டைகளாக்கி மணல்வெளியில் வைத்து விடும். மீண்டும் அலை வரும்போது மறுபடியும் இரை தேட ஆரம்பித்து சிறு சிறு உருண்டைகளை போட்டுவிடும். இந்த உருண்டையான உண்ணப்பட்ட அடையாளத்தை இனங்கண்டுகொள்வதற்காக நண்டுகள் இவ்வாறு செய்கின்றன.

சில நண்டுகள் மரத்தடியின் வேரில் வளையமைத்து, வேரடியில் உள்ள நுண்ணுயிரிகளையும், சிறு புழுக்களையும் உணவாக உண்ணுகின்றன. இந்த நண்டு களை மரத்தில் அமர்ந்திருக்கும் பறவைகள் எளிதில் வேட்டையாடிவிடுகின்றன. இவ்வாறு சூழலியல் கட்டமைப்பின் உணவுச் சங்கிலியில் முக்கிய இடம் வகிக்கும் நண்டுகளின் வாழ்வாதாரம் சிதையும் வண்ணம் இன்றை நாகரிக வியாபார வளர்ச்சி அமைந்துள்ளது. இங்குக் கூட்டமாகக் குவியும் மக்களால் கடல் நண்டுகளுக்கு இடையுறுகளும் நிகழ்கின்றன. இயற்கையை அதன்போக்கிலே விட்டுவிட வேண்டும். கடற்கரையில் மக்கள் கூட்டம் கூடுவதையும், பிளாஸ்டிக் குப்பைகளை கடற்கரையில் போடுவதையும் தவிர்த்தாலே நண்டினங்கள் பெருகும். நண்டினங்கள் பெருகினால் இவற்றை உண்டு வாழும் நாரைகளும் பெருகும். இதனால் சுற்றுச்சூழல் சமன்படுத்தப்படும். குறுந்தொகையின் நெய்தற்திணைப் பாடலில் நண்டுகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

அளவில் சிறிதான மலர்களையுடைய ஞாழல் மரத்தின் வேரடியில் நண்டு அமைத்த வளையை அலை புகுந்து அழித்ததை, குறுந்தொகையின் 328 ஆம்பாடலிலும், தாழையின் வேரடியில் ஈரமான நண்டு வளைஅமைத்திருப்பதை குறுந்தொகையின் 117 ஆம்பாடலிலும் காணலாம்.

வலிமையான கடலலையால் கொணரப்பட்ட மணற்கரையில் ஓடும் நண்டினை, மகளிர் ஓடிப்பிடித்து விளையாடும் விளையாட்டிற்கு ஓரை விளையாட்டு என்று பெயர். இந்த நண்டுகளை மகளிரிடமிருந்து தனது அலைகளால் காக்கும் கடல் பற்றிக் குறுந்தொகையின் 316, 401, ஆம் பாடல்களில் காணலாம்.

கடற்கரையில் அமைத்த வளையின் கண் தங்கி, விரைந்து செல்லும் வளைந்த கால்களையுடைய நண்டு, தன் விரலால் வரைந்த கோடுகளையுடைய மணல் வரிகளை அழித்த கடலலையைப் பற்றி குறுந்தொகையின் 351 ஆம்பாடலில் காணலாம்.

### முதலை

மறைந்திருந்து தாக்கி விலங்குகளையும், மீன்களையும் உண்டு வாழும் ஊர்வன வகையைச் சேர்ந்த முதலையானது, ஆறு, குளம் போன்ற நன்னீரில் வாழும் இனமாகவும், உவர் நீரில் வாழும் இனமாகவும் என இருவகையாக இருக்கிறது. இதன் வாலானது மிகவும் வலிமையுடையதாகவும், கூர்மையான பற்களையும் உடையதாகவும் இருக்கிறது. உவர் நீரில் வாழும் முதலையானது அளவில் பெரியதாகக் காணப்படுகிறது. கடற்கரையில் வளைந்த கால்களையும், கொல்லும் தன்மையுடையதுமாக, அவ்வழிப் போவோரையும் காண்போரையும் அச்சம் கொள்ளும் வகையில் காணப்படும் முதலையை குறுந்தொகையின் .324 ஆம் பாடலில் காணலாம்.

### குண்டு நீர்

கடற்கரையோரச் சோலைகளின் அருகில் உள்ள பள்ளங்களில் மழை பெய்ததால் நீர் நிரம்பிய நன்னீர்க் குண்டுகளில் ஆம்பல் மலர்ந்திருப்பதை குறுந்தொகையின்122 ஆம்பாடலில் காணலாம்.

### முடிவுரை

கடலும், கடல் சார்ந்த நெய்தல் நிலப்பகுதி மண்ணில்உப்புத்தன்மைஅடர்ந்துகாணப்படுவதால் இங்கு வேளாண் தொழிலை மேற்கொள்ள முடியாது. இந்நிலப் பகுதியில் உள்ள அடர்ந்த மரங்கள், பறவைக் கூட்டங்கள், கடல் வாழ் உயிரினங்கள், மீனவர்கள், அலைகள் ஆரவாரம் செய்யும் கடற்கரை என அனைத்தும் சூழலியல் சமநிலையில் பெரும்பங்காற்றுகின்றன. இங்கு வாழும் மக்கள் குடிப்பதற்கு உவர்நீர்க் கேணியைப் பயன்படுத்துகின்றனர். கடலுக்குள் மரத்தினால் செய்த படகில் சென்று மீன்பிடித் தொழிலைச் செய்கின்றனர். மேலும், கடற்கரையோரம் உப்பு நீரைத் தேக்கி, உப்பு தயாரித்து உப்பு விற்கும் தொழிலையும், மீன்களைப் பதப்படுத்தி உப்பு சேர்த்து உலர்த்திக் கருவாடு விற்கும் தொழிலையும் மேற்கொள்கின்றனர். குறுந்தொகையில் காட்சிப்படுத்தப்படும் கடற்கரையோரமானது தாழம்பூவும், ஞாழல் மரமும், புன்னை மரமும் அடர்ந்த சோலைகள் நிறைந்ததாகக் காணப்படுகிறது என்பதை இக்கட்டுரையில் தெளிவாகக் கண்டோம்.

### குறிப்புகள்

1. பாமயன், "திணையியல் கோட்பாடுகள்", தடாகம், சென்னை,2012, ப.11,
2. பழனிவேலு. கே., "தொல்காப்பியத் திணைக் கோட்பாடு, திறனாய்வியல் நோக்கு", மாற்று வெளியீட்டகம், சென்னை, 2018, ப.71,

3. "திருவாசகம்", (திருச்சதகம்),சைவ நூல் அறக்கட்டளை, சென்னை, டிசம்பர். 2022, பா.15,
4. இளம்பூரணனார், "தொல்காப்பியம் (பொருளதிகாரம்)", சாரதா பதிப்பகம், சென்னை, மே. 2005. (மரபியல். நூ.571.)
5. நாராயணன். எஸ்., "வாழ்வு தரும் மரங்கள்",தாமரை பப்ளிகேசுன்ஸ் (பி) லிட், சென்னை,2014, ப.59,
6. மேலது, ப.60.

### மேற்பார்வை நூல்கள்


1. உ.வே.சாமிநாதையர், குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2017,
2. இளம்பூரகனார், "தொல்காப்பியம் (பொருளதிகாரம்)", சாரதா பதிப்பகம், சென்னை, மே.2005.
3. பாமயன், "திணையியல் கோட்பாடுகள்:, தடாகம், சென்னை, 2012,
4. பழனிவேலு. கே., "தொல்காப்பியத் திணைக் கோட்பாடு, திறனாய்வியல் நோக்கு", மாற்று வெளி யீட்டகம், சென்னை, 2018,
5. "திருவாசகம்", (திருச்சதகம்), சைவ நூல் அறக்கட்டளை, சென்னை, டிசம்பர். 2022,
6. நாராயணன். எஸ்., "வாழ்வு தரும் மரங்கள்", தாமரை பப்ளிகேசுன்ஸ் (பி) லிட், சென்னை,2014.